**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 53/2025**

**Dated :02.03.2026**

**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (DefactoComplainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கன்னியாகுமாரி | வயது | : | 55 |
| கணவர் பெயர் | : | தங்கவேல் | தாலுகா | : | **கந்தர்வகோட்டை** |
| கிராமம் | : | கல்லுப்பட்டி | தொழில் | : | கூலிவேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 , 3 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி பாஸ்கர் ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், மாலை 06.30 மணியளவில் நானும் எனது மகன்கள் பழனிச்சாமி, ரமேஷ் ஆகியோர் கல்லுப்பட்டி கிராமத்தில் எதிரி பாஸ்கர் வீட்டின் அருகே சென்ற போது, அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர்கள், எங்களை அசிங்கமாக பேசி, தாக்கி விட்டு ஓடி விட்டார்கள். அவர்கள் யார் என்று என்னால் அடையாளம் காண இயலவில்லை. எதிரிகள் ஏற்கனவே பிரச்சினை செய்திருந்ததால், அவர்கள் தான் அவ்வாறு செய்திருப்பார்கள் என சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது புகார் மனு கொடுத்து விட்டேன். அதன் பின்னர் தான் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிய வந்தது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் மனு அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. நாங்களும், எதிரிகளும் உறவினர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம். இருவரும் கையெழுத்து செய்த சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரிகள் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>நீதிமன்ற கேள்வி:</u>**

1. போலிசார் விசாரணையில் கடந்த 23.08.2022 ஆம் தேதி, மாலை 06.30 மணியளவில் நானும் எனது மகன்கள் பழனிச்சாமி, ரமேஷ் ஆகியோர் கல்லுப்பட்டி கிராமத்தில் எதிரி பாஸ்கர் வீட்டின் அருகே சென்ற போது, அங்கு வந்த எதிரிகள், எங்களை அசிங்கமாக பேசி, 1ஆம் எதிரி கையில் வைத்திருந்த அரிவாள்மனையால் எனது மகன் ரமேஷ்-இன் வலது கை விரல்களை வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும் 2 ஆம் எதிரி பாஸ்கர் கட்டையால் எனது மகன் பழனிச்சாமியை உடம்பில் அடித்ததாகவும் 3ஆம் எதிரி எனது மகன் பழனிச்சாமியின் முதுகில் அடித்ததாகவும் வழக்கு சம்பவத்தில் நாங்கள் பாதிக்கப்பட்டோம் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னேனா என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.02 13:51:39 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 53/2025**

**Dated :02.03.2026**

**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW2 Examined as PW2 (Victim)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | வயது | : | 39 |
| தந்தை பெயர் | : | தங்கவேல் | தாலுகா | : | **கந்தர்வகோட்டை** |
| கிராமம் | : | கல்லுப்பட்டி | தொழில் | : | கூலிவேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 , 3 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி பாஸ்கர் ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், மாலை 06.30 மணியளவில் நானும் எனது அம்மா மற்றும் எனது அண்ணன் ரமேஷ் ஆகியோர் கல்லுப்பட்டி கிராமத்தில் எதிரி பாஸ்கர் வீட்டின் அருகே சென்ற போது, அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர்கள், எங்களை அசிங்கமாக பேசி, தாக்கி விட்டு ஓடி விட்டார்கள். அவர்கள் யார் என்று என்னால் அடையாளம் காண இயலவில்லை. எதிரிகள் ஏற்கனவே பிரச்சினை செய்திருந்ததால், அவர்கள் தான் அவ்வாறு செய்திருப்பார்கள் என சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது எனது அம்மா புகார் மனு கொடுத்து விட்டார். அதன் பின்னர் தான் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிய வந்தது.

2. நாங்களும், எதிரிகளும் உறவினர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம். இருவரும் கையெழுத்து செய்த

சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரிகள் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>நீதிமன்ற கேள்வி:</u>**

1. போலிசார் விசாரணையில் கடந்த 23.08.2022 ஆம் தேதி, மாலை 06.30 மணியளவில் நானும் எனது அம்மா மற்றும் எனது அண்ணன் ரமேஷ் ஆகியோர் கல்லுப்பட்டி கிராமத்தில் எதிரி பாஸ்கர் வீட்டின் அருகே சென்ற போது, அங்கு வந்த எதிரிகள், எங்களை அசிங்கமாக பேசி, 1ஆம் எதிரி கையில் வைத்திருந்த அரிவாள்மனையால் எனது அண்ணன் ரமேஷ்-இன் வலது கை விரல்களை வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும் 2 ஆம் எதிரி பாஸ்கர் கட்டையால் என் உடம்பில் அடித்ததாகவும் 3ஆம் எதிரி என் முதுகில் அடித்ததாகவும் வழக்கு சம்பவத்தில் நாங்கள் பாதிக்கப்பட்டோம் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னேனா என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.02 13:51:48 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 53/2025**

**Dated :02.03.2026**

**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW3 Examined as PW3 (Victim)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | வயது | : | 41 |
| தந்தை பெயர் | : | தங்கவேல் | தாலுகா | : | **கந்தர்வகோட்டை** |
| கிராமம் | : | கல்லுப்பட்டி | தொழில் | : | கூலிவேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 , 3 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது) )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி பாஸ்கர் ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், மாலை 06.30 மணியளவில் நானும் எனது அம்மா மற்றும் எனது தம்பி பழனிச்சாமி ஆகியோர் கல்லுப்பட்டி கிராமத்தில் எதிரி பாஸ்கர் வீட்டின் அருகே சென்ற போது, அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர்கள், எங்களை அசிங்கமாக பேசி, தாக்கி விட்டு ஓடி விட்டார்கள். அவர்கள் யார் என்று என்னால் அடையாளம் காண இயலவில்லை. எதிரிகள் ஏற்கனவே பிரச்சினை செய்திருந்ததால், அவர்கள் தான் அவ்வாறு செய்திருப்பார்கள் என சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது எனது அம்மா புகார் மனு கொடுத்து விட்டார். அதன் பின்னர் தான் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிய வந்தது.

2. நாங்களும், எதிரிகளும் உறவினர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம். இருவரும் கையெழுத்து செய்த

சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரிகள் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:**

1. போலிசார் விசாரணையில் கடந்த 23.08.2022 ஆம் தேதி, மாலை 06.30 மணியளவில் நானும் எனது அம்மா மற்றும் எனது தம்பி பழனிச்சாமி ஆகியோர் கல்லுப்பட்டி கிராமத்தில் எதிரி பாஸ்கர் வீட்டின் அருகே சென்ற போது, அங்கு வந்த எதிரிகள், எங்களை அசிங்கமாக பேசி, 1ஆம் எதிரி கையில் வைத்திருந்த அரிவாள்மனையால் என் வலது கை விரல்களை வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும் 2 ஆம் எதிரி பாஸ்கர் கட்டையால் எனது தம்பி பழனிச்சாமியின் உடம்பில் அடித்ததாகவும் 3ஆம் எதிரி எனது தம்பி பழனிச்சாமியின் முதுகில் அடித்ததாகவும் வழக்கு சம்பவத்தில் நாங்கள் பாதிக்கப்பட்டோம் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னேனா என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.02 13:51:56 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 53/2025**

**Dated :02.03.2026**

**Deposition of witness for : P.W4**

**Additional Witness Examined as PW4 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மரியதாஸ் | வயது | : | 52 |
| தந்தை பெயர் | : | **தேவராஜ்** | தாலுகா | : | கந்தர்வக்கோட்டை |
| கிராமம் | : | கந்தர்வக்கோட்டை | தொழில் | : | **காவல்** உதவி **ஆய்வாளர்** |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(1 , 3 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

முதல் விசாரணை

1) நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு முன்பு பணியில் இருந்த, சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் மற்றும் உதவி ஆய்வாளர் வேலுச்சாமி ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். அவர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டதால், வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் கடந்த 24.08.2022 ஆம் தேதி, கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில், நிலைய பொறுப்பில் இருந்த போது, கல்லுப்பட்டி கிராமத்தினை சேர்ந்த தங்கவேல் மனைவி கன்னியாகுமாரி என்பவர், நிலையம் ஆஜராகி, கொடுத்த புகார்மனுவை பெற்று, நிலைய குற்ற எண் 350/2022 இல் சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 இதச -இன் கீழ் வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் வேலுச்சாமி என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.**

2) அவர், இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 24.08.2022 ஆம் தேதி, மதியம் 02.00 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் அய்யாவு மற்றும் சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3) பின்னர் பட்டியல் சாட்சிகள் கன்னியாகுமாரி, பழனிச்சாமி, ரமேஷ், சங்கர், கணேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளை விசாரித்து வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள் தலைமறைவாக இருந்துவந்ததால், அவர்களை கைது செய்யவில்லை.

4) பின்னர் 30.09.2022 ஆம் தேதி தஞ்சாவூர் மீனாட்சி தனியார் மருத்துவமனை சென்று அ.சா.3-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணவேலு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றுஅ.சா.3-க்கான விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்துள்ளார். **( மேற்படி விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று முறையே அ.சா.ஆ5 மற்றும் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** மேற்படி காயச்சான்றில் அ.சா.3-க்குஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கப்பட்டிருந்ததாலும் வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323, 324 இதச-இலிருந்து 294(b), 323, 324, 326 இதச ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.**( மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**5)** பின்னர், இத்துடன் இந்த விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு 1ஆம் எதிரிக்கு எதிராக 294(b), 326 இதச இன் கீழும், 2ஆம் எதிரிக்கு எதிராக 294(b), 324 இதச இன் கீழும், 3ஆம் எதிரிக்கு எதிராக 294(b), 323 இதச இன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும்

பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, எதிரிகளுக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.02 13:52:08 +0530

**என். சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**